## October 7, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நிகழாண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசை பெறுவதற்கு அமெரிக்கா மற்றும் ஜப்பானைச் சேர்ந்த மூவர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
   i. ஸ்வீடன் தலைந்கர் ஸ்டாக்ஹோமில் நிகழாண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.
   ii. அதன்படி, அமெரிக்காவின் சியாட்டில் நகரில் உள்ள இன்ஸ்டிட்யூட் ஃபார் சிஸ்டம்ஸ் பயாலஜி அறிவியல் ஆராய்ச்சி அமைப்பில் மூத்த திட்ட மேலாளராகப் பணியாற்றும் மேரி இ.பிரன்கோ (64), அமெரிக்காவின் சான்ஃபிரான்சிஸ்கோ நகரில் உள்ள சோனோமா பயோ தெரபியூட்டிக்ஸ் உயிரி தொழில்நுட்ப நிறுவனத்தில் அறிவியல் ஆலோசகராகப் பணியாற்றும் ஃபிரட் ராம்ஸ்டெல் (64), ஜப்பானின் ஒசாகா பல்கலைக்கழகத்தில் உள்ள நோய் எதிர்ப்பியல் ஆராய்ச்சி மையத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் ஷிமோன் சககுச்சி (74) ஆகிய மூவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட உள்ளதாக குழு உறுப்பினர் தாமஸ் பர்ள்மன் அறிவித்தார்.
   iii. இதுதொடர்பாக நோபல் பரிசு தேர்வுக் குழு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட் டதாவது: மனித உடலின் சக்திவாய்ந்த நோய் எதிர்ப்பு அமைப்பு கட்டுப்படுத்தப்பட வேண்டும். இதைச் செய்யாவிட்டால், அந்த அமைப்பு உடல் உறுப்புகளைத் தாக்கக் கூடும். இந்நிலையில், உடல் உறுப்புகளை நோய் எதிர்ப்பு செல்கள் தாக்காமல் தடுத்து முறைப்படுத்தும்'டி'செல் களை மூவரும் கண்டுபிடித்துள்ளனர்.
   iv. உடலில் உள்ள நோய் எதிர்ப்பு அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது?, அந்த அமைப்பு உடலைக் காப்பதற்குப் பதிலாக ஆரோக்கியமான உடல் உறுப்புகள், திசுக்கள், செல்களை தவறுதலாகத் தாக்கினால் உண்டாகும் தீவிர நோய்கள் அனைவருக்கும் ஏன் ஏற்படுவதில்லை? என்பது குறித்து தீர்க்கமாகப் புரிந்துகொள்ள அவர்களின் கண்டுபிடிப்பு உதவியுள்ளது.
   v. மூவருக்கும் நோபல் பரிசுடன் 11 மில்லியன் ஸ்வீடிஷ்கிரோனர் (சுமார் ரூ.10.40 கோடி) பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
   vi. ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானியும், வெடிபொருளைக் கண்டுபிடித்த வருமான ஆல்ஃபிரட் நோபலின் உயிலைப் பின்பற்றி, கடந்த 1901-ஆம் ஆண்டுமுதல் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதிக்கான நோபல் பரிசு ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது. ஆல்ஃபிரட் நோபல் மறைந்த நாளான டிச.10-ஆம் தேதி ஸ்டாக்ஹோம் மற்றும் நார்வே தலைநகர் ஓஸ்லோவில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும்.
2. ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள கோழிக்க முத்தி யானைகள் முகாமில், இந்தியாவின் 2-ஆவது பாகன்களுக்கான பிரத்யேக கிராமத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.
3. பிரான்ஸ் பிரதமராக பொறுப்பேற்ற 27 நாள்களில் அந்தப் பதவியை செபாஸ்டியன் லெகார்னு ராஜிநாமா செய்தார். தனது புதிய அமைச்சரவையை அறிவித்த ஒரு நாள் கழித்து இந்த முடிவை அறிவித்துள்ளார்.
   i. லெகார்னுவின் ராஜிநாமாவை அதிபர் இமானுவல் மேக்ரான் ஏற்றுக்கொண்டதாக அதிபர் மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
   ii. பட்ஜெட் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய முக்கியமான நேரத்தில் பிரதமர் ராஜிநாமா செய்துள்ளது, பிரான்ஸ் அரசியல் களத்தில் புதிய நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

4. நைஜீரியாவில் நடைபெற்ற சர்வதேச பாரா பாட்மின் டன் போட்டியில் இந்தியா வின் பிரமோத் பகத், ஆட வர் தனிநபர், ஆடவர் இரட் டையர் (சுகந்த் கடத்துடன் இணைந்து), கலப்பு இரட் டையர் (ஆரத்தி பாட்டீலு டன் சேர்ந்து) ஆகியவற்றில் வாகை சூடி ஹாட்ரிக் தங்கம் வென்றார்.
5. ஐஎன்எஸ் ஆந்த்ரோத் எனும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது.
   i. விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை தளத்தில் நடைபெற்ற நிகழ்வில் நாட்டின் இரண்டாவது நீர் மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பலான ஐஎன்எஸ் ஆந்த்ரோத் கடற்படையில் இணைக்கப்பட்டது.
6. இலங்கையில் நல்லிணக்கம், மனித உரிமைகள் மற்றும் பொறுப்பான செயல்பாடுகளை ஊக்குவிப்பதை வலியுறுத்துவதற்கான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
   i. வாக்கெடுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த தீர்மானம் இலங்கையில் மனித உரிமைகள் ஆணையரின் பணிகளை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கவும் வழிவகுத்தது.
   ii. அந்த தீர்மானத்தில் கூறப்பட்டி ருப்பதாவது: இலங்கையில் நீண்ட காலமாக நடைபெறாமல் உள்ள மாகாண கவுன்சில் தேர்தல்களை விரைந்து நடத்தி அரசமைப்புச் சட்டத்தின் 13-ஆவது திருத்தத் தின்படி செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.
   iii. ஊழல் மற்றும் பொருளாதார சீரழிவுகளுக்கு எதிராக தற்போதைய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பாராட்டுவ தோடு மேலும் அதிகரிக்க வலியுறுத்தப்படுகிறது.
   iv. தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களை கைது செய்யல் தவறாக பயன்படுத்தப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.
   v. இணைய பாதுகாப்புச் சட்டம் மற்றும் கருத்துரிமைச் சட்டங்களை பாதுகாத்து அதில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.
   vi. பல புதை குழிகளை தோண்டி ஆய்வு நடத்த சர்வதேச அளவில் நிதி,மனித மற்றும் தொழில்நுட்ப உதவிகளை இலங்கை அரசு முன்கூட்டியே கோர வேண்டும்.
7. இந்தியா - கத்தாரி டையே அடுத்த ஆண்டு மூன்றாவது காலாண்டில் தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள வாய்ப்புள்ளது என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.
   i. இரு நாள் பயணமாக கத்தார் சென்றுள்ள அமைச்சர் பியூஷ் கோயல் அந்நாட்டு தொழில்- வர்த்தகத் துறை அமைச்சர் ஷேக் பைசல் பின் பைசல் அல் தானியைச் சந்தித்து இதுதொடர்பாக ஆலோசனை நடத்தினார்.
   ii. ஓமன், சிலி, பெரு, அமெ ரிக்கா, நியூஸிலாந்து, யுரேஸியா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றுடன் தடையில்லா வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
8. தமிழகத்தில் ‘ஸ்கரப் டைபஸ்’ எனப்படும் பாக்டீரியா தொற்று அண்மைக் காலமாக அதிகரித்து வருவதால், அது தொடர் பான தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக பொது சுகா தாரத் துறை தெரிவித்துள்ளது.
   i. ரிக்கட்ஸியா எனப்படும் பாக்டீரியா பாதித்த ஒட்டுண்ணிகள், பூச்சிகள், உயிரினங்கள் மனிதர்களைக் கடிக்கும்போது, அவர்களுக்கு ஸ்கரப் டைபஸ் காய்ச்சல் ஏற்படுகிறது. காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு மற்றும் தடிப்புகள் அதன் முக்கிய அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன.

ii. தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருப்பத்தூர், திருவள்ளூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, வேலூர் ஆகிய பகுதிகளில் அதிக அளவில் அந்தப் பாதிப்பு பரவி வருகிறது.

iii. இதைத் தவிர, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளி லும் ஸ்கரப் டைபஸ் தொற்று காணப்படுகிறது.

iv. இதுதொடர்பாக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது: விவசாயிகள், புதர்மண்டிய மற்றும் வனப் பகுதிகளுக்கு அருகே வசிப்பவர்கள், மலையேற்றத்தில் ஈடுபடுவோர், கர்ப்பிணிகள், பூச்சிக் கடிக்குள்ளாகும் சூழலில் இருப்போருக்கு இந்தப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

v. எலிஸா ரத்தப் பரிசோதனை மற்றும் மூலக்கூறு பரிசோதனைகள் மூலமாக இந்த நோயைக் கண்டறியலாம். ஸ்கரப் டைபஸ் காய்ச்ச லால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அசித்ரோமைசின், டாக்ஸிசைக்ளின் போன்ற ஆன்ட்டி பயாடிக் மருந்துகளை அளித்து சிகிச்சையளிக்க வேண்டும்.